# சுடர் ஒளி
THE SUDAR OLI

සුඩර් ඔළි

27.12.2020 ஞாயிற்றுக்கிழமை




# வரலாற்றைப் பதிவு செய்ய நாம் தவறியிருக்கின்றோம்

## விக்னேஸ்வரன் வேதனை

யாழ்ப்பாணம், டிசெம். 27
தமிழர்கள் தமது வரலாறுகளை உரிய வகையில் பதிவு செய்யவில்லை. பெரும்பான்மை மக்களின் சாசனங்கள் வாயிலாக வரலாறுகள் தமிழர்களுக்கு எதிராகத் திரிக்கப்பட்டு எழுதப்பட்டு வருகின்றன. இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். 'அழிக்கப்படும் சாட்சியங்கள்' என்ற நூல் வெளியீடு 2

# உதயன் மீதான பாய்ச்சல் அடக்குமுறையின் ஆரம்பமே!

## சிவசக்தி ஆனந்தன் சீற்றம்



வவுனியா, டிசெ. 27
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் ஒளிப்படத்தை பிரசுரித்த மைக்காக உதயன் பத்திரிகை 2

# 360 கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 27
காங்கேசன்துறை கடற்கரைப் பகுதியில் 360 கிலோ கிராம் கேரளக் கஞ்சா மீட் கப்பட்டுள்ளது. 2

# மாநகர மேயர் போட்டியில் மீண்டும் ஆனோல்டே!!!


## கூட்டமைப்பு விடாப்பிடி



யாழ்ப்பாணம், டிசெம்பர் 27
யாழ்ப்பாணம் மாநகரசபையின் மேயர் பதவிக்கு மீண்டும் ஆனோல்டை நிறுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது. இருப்பினும் நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பதவிக்கு யாரைப் பிரேரிப்பது என்பது தொடர்பில் இன்றைய கூட்டத்தில் இறுதி செய்யப்படவில்லை. 2

# யாழ்.நகர் ஆரியகுளத்தில் முதியவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 27
யாழ்ப்பாணம் ஆரியகுளத்தில் இருந்து முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். ஆரியகுளம் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் கடந்த 2




# கொரோனா அபாய வலயங்கள் வடக்கிலும் விரிவடைகின்றன

கொழும்பு, டிசெ. 27
வடக்கு மாகாணத்தில் 7 இடங்கள் கொரோனா அபாய வலயங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன. தேசிய ரீதியில் கொரோனா அபாய வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் வடக்கு மாகாணத் 2

# திரையரங்குகளை திறக்க அனுமதி

கொழும்பு, டிசெ. 27
சுகாதார வழிகாட்டல்களுக்கமைய ஜனவரி முதலாம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் உள்ள திரையரங்குகளை திறப்ப 2

## புதினம் தெரியுமோ?

கல்விப் புலத்தினுள் அரசியல் ஊடுருவியதால் பலர் பந்தாடப்படுகின்றனர். கிளிநொச்சி கல்வி வலயத்தில் பாடசாலை ஒன்றில் அதிபராக இருப்பவர், 10 ஆண்டுகளுக்கு முன்னர் விபத்தில் சிக்கியிருந்தார். அதிலிருந்து மீண்டிருந்தார். பல சம்பள ஏற்றங்களைக் கண்டு அவர் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார். 5

# புதுக்குடியிருப்பு தொற்றாளரில் வீரியம் அதிகமுள்ள வைரஸ்!

முல்லைத்தீவு, டிசெ. 27
முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று அடையாளம் காணப்பட்ட தொற்றாளரின் மாதிரிகளில் வைரஸ் மிகவும் வீரியம் கூடியதாக காணப்படுகின்றது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வ 2

## 360 கிலோ...

காங்கேசன்முறை
சிறப்புக் குற்றத்தடுப்புப்
பிரிவால் இன்று காலை
மேற்கொள்ளப்பட்ட
நடவடிக்கையிலேயே
மேற்படி கஞ்சா மீட்கப்
பட்டது என்று தெரிவிக்
கப்பட்டுள்ளது. இது
தொடர்பான மேல திக
விசாரணைகள் தெல்லிப்
பழை பொலிஸாரால்
மேற்கொள்ளப்பட்டு
வருகின்றன. (ம-26)

## யாழ்.நகர்....

இரண்டு தினங்களாகக்
காணாமல் போயிருந்த
நிலையில் அவர் இன்று
சடலமாக மீட்கப்பட்
டார். இது தொடர்பான
விசாரணைகளை யாழ்ப்
பாணப் பொலிஸார்
மேற்கொண்டு வருகின்ற
னர். (ம-இ)

## திரையரங்குகளை...

தற்கு கலாசார அலுவல்கள்
அமைச்சருமான பிரதமர்
மஹிந்த அனுமதியளித்துள்
ளார். தனிமைப்படுத்தப்
பட்டுள்ள பிரதேசங்கள்
தவிர்ந்த ஏனைய அனைத்துப்
பிரதேசங்களி லுமுள்ள
திரையரங்குகள் ஜனவரி
முதலாம் திகதி முதல்
திறக்கப்படும். (ஒ)

## மாநகர....

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு
உட்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும்
நல்லூர் பிரதேச சபை என்பனவற்றின் வரவு
செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டமை
யால் மேயராக இருந்த ஆனல்ட் மற்றும் பிர
தேச சபைத் தவிசாளராக இருந்த தியாகமூர்த்தி யும்
பதவி விலகினர்.
யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் நல்லூர்
பிரதேச சபை என்பனவற்றின் மேயர் மற்றும்
தவிசாளர் தெரிவுகள் எதிர்வரும் 30ஆம் திகதி
மீண்டும் இடம்பெறவுள்ளன.
இது தொடர்பில் தமிழ்த் தேசியக்
கூட்டமைப்பின் சபை உறுப்பினர்களுடனான
கலந்துரையாடல் கடந்த 24ஆம் திகதி தமிழ்
அரசுக் கட்சியின் தலைமையகம் அமைந்துள்ள
மார்ட்டின் வீதியில் நடைபெற்றிருந்தது. அதில்
இறுதி முடிவு எதுவும் எட்டப்பட்டிருக்க
வில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்
பங்காளிக் கட்சித் தலைவர்கள் இடையிலான
கலந்துரையாடல் இன்று இடம்பெற்றது.
இதன்போது யாழ்ப்பாண மாநகர சபை விவகா
ரம் ஆராயப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்ட
மைப்பின் சார்பில் யாரை நிறுத்தவேண்டும்
என்பதை ஏனைய கட்சிகள் தீர்மானிக்க முடி
யாது எனவும், மீளவும் ஆனோல்டையே களமி
றக்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.
நல்லூர் பிரதேச சபை தொடர்பில் ஆராயப்பட்
டது. ரெலோவுக்கு தவிசாளர் பதவி தரப்பட
வேண்டும் என்று அந்தக் கட்சி வலியுறுத்தியது.
அந்தக் கட்சி சார்பில் தவிசாளர் பதவிக்கு
பெயர் குறிப்பிடப்படுபவர், முன்னைய தவிசாள
ரின் வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிக்க
பல்வேறு வழிகளிலும் முயற்சி செய்தவர்
என்றும் அவ்வாறான ஒருவருக்கு எவ்வாறு
தவிசாளர் பதவியை வழங்கலாம் எனவும்,
ஏனையோர் கேள்வி எழுப்பினர். இது தொடர்
பில் நாளை மறுதினம் 29ஆம் திகதி முடிவு
செய்யப்படும். (ஒ,5)

## உதயன் மீதான பாய்ச்சல்....

மீது வழக்கு பதிவு செய்யப்பட்டமையா
னது கண்டனத்திற்குரியது என்று தமிழ்
மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச்
செயலரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி
னருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்
துள்ளார்.
உதயன் மீதான பாய்ச்சல் எதிர்காலத்தில்
ஊடகங்களை அடக்கி மௌனிக்கச்
செய்வதற்கான ஆரம்ப சமிக்ஞையாகவுள்
ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள
ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்
டுள்ளதாவது,
தமிழின விடுதலைப் போராட்டம் பல
தளங்களில் பல்வேறுபட்ட அமைப்புக்க
ளால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.
தமிழீழ விடுதலைப் புலிகளும் இனவிடுத
லைக்கான போராட்டத்தை
முன்னெடுத்தி ருந்தனர். அந்தப் போராட்
டத்துக்கு தலைமை வகித்தவர்
பிரபாகரன். இது தமிழினத்திலிருந்து
என்றுமே பிரிக்கமுடியாத வரலாறு. தமிழ்
மக்களின் உயிர்நாடியாகச் செயற்பட்டு
வரும் ஊடகமொன்று போராட்டத்தில்
பங்கெடுத்த அமைப்பின் தலைவர்
ஒருவரின் படத்தை பிரசுரிப்பதில் எந்தவி
தமான தவறுகளும் இல்லை. மேலும்,
அதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்படுவ
தானது பலத்த சந்தேகங்களை ஏற்படுத்து
வதாக உள்ளது.
வடக்கு கிழக்கை மையப்படுத்தி செயற்
பட்டு வரும் ஊடகங்களில் காத்திரமான
தொன்றாக இருப்பது உதயன் பத்திரிகை.
அதனைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக
தமிழர்களுக்கு பின்னடைவுகளை ஏற்படுத்
தலாம் என்ற செயற்பாடாகவே இதனைக்
கருத வேண்டியுள்ளது.
இன்று முறையற்ற காரணமொன்றை
முன்வைத்து, உதயன் மீது நடவடிக்கைகள்
எடுப்பதற்கு முயற்சிகள்
முன்னெடுக்கப்படுகின்றன. இது எதிர்கா
லத்தில் தமிழ் மக்களின் குரலாக இருக்கும்
அனைத்து ஊடகங்களையும் மௌனமாக்
குவதற்கான ஆரம்ப நடவடிக்கையாகும்.
கருத்துச் சுதந்திரத்தை நசுக்குவதன் மூலம்
தமிழினத்தை அடக்குவதற்கான
முயற்சிகள் முன்னெடுக்கப்படு கின்றனவா
என்ற கேள்வியையும் ஏற்படுத்துகின்றது.
அதுமட்டுமன்றி மீண்டும் நாட்டை
இருண்ட யுகத்திற்குள் தள்ளிவிடுவதற்
கான சமிக்ஞையும் வெளிப்படுகின்றது,
என்றார். (ஒ,110)

## வரலாற்றை...

இன்று பி.ப. 2 மணிக்கு யாழ்ப்பா
ணம் பொது நூலக மாநாட்டு
மண்டபத்தில் இடம்பெற்றது.
இதில் கலந்து கொண்டு உரையாற்
றுகையிலேயே அவர் மேற்கண்ட
வாறு கூறினார். அவர் மேலும்
தெரிவித்ததாவது:

**ஏக்கங்களுடன் சாவு**

போரால் பல்வேறுபட்ட இளை
யோர் வகைதொகையின்றி
இராணுவப் படைகளாலும்
புலனாய்வுப் பிரிவினராலும் கைது
செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்
பட்ட நிலையில் அவர்களைத்
தேடி அலைந்த அவர்களின்
பெற்றோர்கள், பிள்ளைகள்,
சகோதரங்கள், உற்றார், உறவினர்
கள் எனப் பலர் தமது இறுதி
மூச்சுவரை மகனை அல்லது
மகளை அல்லது சகோதர சகோத
ரிகளை அல்லது உற்றவரை,
உறவினரைத் தேடி அலைந்து,
அவர்களுக்காக நீதிகோரிய
போராட்டங்களில் தொடர்ந்து
ஈடுபட்டு இறுதியில் நோய்
வாய்ப்பட்டு இறப்பைத் தழுவிக்
கொண்ட 74 பேரின் பதிவுகள்
இந்த நூலில் காணப்படுகின்றன.
ஏமாறிய நிலையில் இவ்வுலகை
விட்டு ஏகியவர்களின்
விபரக்கோவையே இன்று வெளியி
டப்படும் நூல்.

**இனப்படுகொலை**

பண்டைய தமிழ் மக்களின்
வரலாறுகள், அவர்களின் இருப்புக்
கள், பாரம்பரியங்கள் என்பவை நூல்
வடிவிலோ, ஓலைச் சுவடிகளிலோ
அல்லது கற்களில் வடித்தோ
முறையாக பேணப்படாமையால்
இன்று எமது சரித்திர வரலாறுகள்
திரிபுபடுத்தப்பட்டு வருகின்றன.
தினம் தினம் மாற்றி எழு தப்பட்டு
வருகின்றன. பெரும்பான்மை
மக்களின் சாசனங்கள் வாயிலாக
வரலாறுகள் தமிழர்க்கு எதிராகத்
திரிக்கப்பட்டு எழுதப்பட்டு
வருகின்றன. அதுமட்டுமல்லாது
இந்த நாட்டின் பூர்வீகக்
குடிகளாகிய 3 ஆயிரம் வருடங்கள்
பழைமை வாய்ந்த தமிழர்களின் வர
லாறுகள் நீக்கப்பட்டு கிறிஸ்து
வுக்குப் பின் 6ஆம் 7ஆம் நூற்றாண்
டள வில் வழக்குக்கு வந்த சிங்கள
மொழி பேசுவோரே இந்த நாட்டின்
பூர்வீகக் குடிகள் எனவும் தமிழ்
மக்கள் அதன் பின்னைய காலங்க
ளில் குடியேறிய மக்கள் எனவும்
சிருஷ;டிக்கப்பட்டு வருகின்றது.
இனப்படுகொலையின் ஒரு
அம்சமாகவே இதனை நாம்
பார்க்க வேண்டியுள்ளது.

**மனப்பாங்கு மாறவேண்டும்**

உலக சனத்தொகையில் தமிழர்
களை விட குறைந்த அளவில்
உள்ள சிங்கள மக்கள் ஓரளவுக்கு
செறிந்து வாழுகின்ற இந்த நாட்
டில், தமிழ் மக்களுக்கு அவர்களின்
உரிமையைக் கொடுத்துவிட்டால்
சிங்கள மக்களுக்கு இருக்க நாடு
இல்லாமல் போய்விடும், அவர்க
ளுக்கு என்று ஒரு தேசம் இல்லா
மல் போய்விடும் எனப் பயப்படு
கின்றார்கள் சிங்கள அரசியல்வாதி
களும் அவர்களைச் சார்ந்தவர்க
ளும், இலங்கைத் தீவை விட சிறிய
நாடாகிய சிங்கப்பூரில் பல
மொழிகளைப் பேசுகின்ற பல் இன
மக்கள் வாழுகின்ற போதும் அந்த
நாட்டில் மொழி வேறுபாடு
இல்லை. மத வேறுபாடு இல்லை.
ஆனால் அங்கு சுபீட்சம்
நிலவுகின்றது. நாடும் வளம்
பெற்று வளர்ந்து வருகின்றது
என்பதை அவர்கள் உணர வேண்
டும். ஆனால் எமது நாட்டில்
இரண்டு பிரிவினர்களுக்கி டையே
தான் பிரச்சனை வலுவடைந்துள்
ளது. நிலவுகின்ற இந்தப் பிரச்ச
னையை தீர்த்து வைப்பது
சிரமமான ஒரு காரியமே அல்ல.
எனினும் தமிழ் மக்களுக்கு எதனை
யும் கொடுத்துவிடக்கூடாது என்ற
மனப்பாங்குடன் செயற்படும்
சிங்களத் தலைவர்களின் பிழை
யான வழிகாட்டல்களே தமிழ்
மக்கள் மீது பல விதமான ஒடுக்கு
முறைகள் தலைவிரித்தாடக்
காரணமாக இருந்து வந்துள்ளன.

**ஆவணமாகவேண்டும்**

போர் நிறைவு பெற்ற 2009ஆம்
ஆண்டு காலப்பகுதியில் இராணு
வத்திடம் தமது கணவரை முறை
யாக கையளித்த பெண்கள்,
பிள்ளைகளை கையளித்த தாய்மார்
கள், சகோதரங்களைக் கையளித்த
சகோதரர்கள் மற்றும் உற்றார்
உறவினர்கள் போன்றோரை
கையளித்தவர்களை இழிவுபடுத்
தும் விதத்தில் அவ்வாறான
கையளிப்புக்கள் எதுவும் நடக்க
வில்லை அவ்வாறான எந்தவொரு
அரசியல் கைதிகளும் தம்மிடம்
இல்லை எனக் கூறி இப்போது
மறுப்புத் தெரிவிக்கப்பட்டு
வருகின்றது. அது சம்பந்தமான
விசாரணையை நடத்த வேண்டும்
என்று உலக நாடுகள் கேட்டுவரி
னும் அக் கோரிக்கைகளுக்கு
இணங்காது தான்தோன்றித்தன
மாக இலங்கை அரசு நடந்து
வருகின்றது. அதுபோலவே
இன்றைய கை நூலில் ஆவணப்ப
டுத்தப்படும் வரலாற்றுப் பதிவுகள்
தொடர்ந்து எம் கைகளில் கிட்டா
மல்ப் போனால் இன்னும் சற்றுக்
காலம் செல்ல இந்த நிகழ்வுகள்
எல்லாம் பொய்யாகப்
புனையப்பட்டவை என ஜெனீவா
விலும் உலக அரங்கிலும் கூறத்
தொடங்கிவிடுவார்கள். ஆகவே
தான் மரணித்தோரின் பதிவுகள்
இந்நூலின் மூலம் ஆவணப்படுத்
தப்பட்டு வருங்கால நிரூபணங்க
ளாக பதியப்பட்டுள்ளன.

**விடிவு கிட்டும்**

எமது வரலாறுகள் நன்மையானதோ
தீமையானதோ அனைத்தும்
ஆவணமயப்படுத்தப்பட வேண்
டும் என்பது அத்தியாவசியமாகின்
றது. முன்னர் தான் நாம் எமது
சரித்திரங்களை எழுதிவைக்க
வில்லை. தொடர்ந்தும் அவ்வாறு
வாளாதிருப்பது எமக்கு பலத்த
பாதிப்பை ஏற்படுத்தும். இவ்வளவு
கோரக் கொடுமைகளின் பின்பும்
தமிழ் மக்கள் அமைதியாக இங்கு
இருந்து வருவது பிறநாட்டவர்க்கு
வியப்பை அளித்தாலும் ஏதோ ஒரு
விடிவு காலம் அண்மையில் வரப்
போகின்றது என்ற எண்ணமே எம்
மக்களின் எதிர்பார்ப்பாக அமைந்து
எம்மை ஓட்டி வருகின்றது. காலத்
துக்கு காலம் மாற்றங்கள் ஏற்படு
வதே மனித வாழ்க்கை. தொடர்ந்து
கஷ்டத்தையே எம் மக்கள் அனுப
வித்து வரவேண்டிய அவசிய
மில்லை. விடிவு விரைவில் வரும்
என நம்புவோம், என்றார். (ஒ)

## புதுக்குடியிருப்பு தொற்றாளரில்....

ரன் தெரிவித்தார். இதனால் குறித்த தொற்றாளரு
டன் தொடர்பினை மேற்கொண்ட நபர்கள் தங்க
ளது பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியுடன்
தொடர்புகொண்டு பி.சி.ஆர் சோதனையை முன்
னெடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.
வடமாகாணத்தில் உள்ள கொரோனா நிலவரம்
தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கை
யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ். போதனா மருத்துவமனையின் ஆய்வுகூடத்தில்
நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை
யில் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு சுகாதார
மருத்துவ அதிகாரி பிரிவை சேர்ந்த 37 வயதுடைய
ஆண் ஒருவருக்கு
கொரோனா தொற்று உறுதி
செய்யப்பட்டிருந்தது.
குறித்த நபர் தம்புள்ள
சந்தைக்கு சென்று மரக்கறி
களை கொள்வனவு செய்து வந்து வியாபார நடவடிக்
கைகளை மேற்கொள்பவர் என உறுதிப்படுத்தப்பட்
டுள்ளது. புதுக்குயிருப்பு பிரதேசத்தில் எழுமாற்றாக
பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது
குறித்த நபருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்
ளது. அவர் குறித்த பகுதியில் பல பொதுமக்களோடு
தொடர்பிலே இருந்திருக்கின்றார். எங்களுக்கு
கிடைத்த ஆய்வுகூட முடிவுகளைப் பார்க்கின்ற
போது அவருக்கு ஏற்பட்டிருக்கும் கொரோனா
மிகவும் வீரியமானதாக இருக்கின்றது. எனவே
அவரில் இருந்து பலருக்கு தொற்று ஏற்படக்கூடிய
வாய்ப்புக்கள் இருக்கின்றன. இதனால் அவரோடு
தொடர்பிலே இருந்தவர்கள் தயவுசெய்து உங்களது
பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியுடன் தொடர்
புகொண்டு பரிசோதனைகளை முன்னெடுப்பதன்
மூலம் உங்களது பிரதேசத்தில் கொரோனா பரவ
லைக் கட்டுப்படுத்த முடியும் என்றார். (ம-இ)

# புதிய நிர்வாக குழு நியமிப்பு

கொடிகாமம், டிசெ. 27

கொடிகாமம் போக்கட்டி அ.த.க பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திக்குழுப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாக குழுத் தெரிவும் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது தலைவராக தி.அபராஜிதன், உபதலைவராக சீ.நந்தகுமார், செயலாளராக ம.மயூரன், பொருளாளராக திருமதி க.விநாயகரூபன், உறுப்பினர்களாக திருமதி தி.மதிவண்ணன், ஜெ.ஜெயந்தன், ச.ஜெயராசா, த.தமிழினி ஆகியோர் நியமிக்கப்பட்டனர். (ரி5-159)

# வாழ்வாதார உதவி வழங்கல்

கொடிகாமம், டிசெ.27

துலா தன்னார்வ அமைப்பால் முன்னெடுக்கப்படும் வாழ்வாதார மற்றும் சுயதொழில் மேம்பாட்டு செயற் திட்டத்தினூடாக சங்கானை பிரதேசத்தில் வாழ்வாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் முருகா முத்துக்குமாரசாமி மற்றும் பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் இராசேந்திரன் செல்வக்குமார் ஆகியோரின் நிதி பங்களிப்பின் மூலம் கோழிக்கூடு, நாட்டுக் கோழிகள், ஒரு மாதத்துக்குத் தேவையான உலர் உணவு பொருள்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பவை வழங்கப்பட்டன. (ச-159)

# மண்டல பூஜை

வவுனியா, டிசெ. 27

வவுனியாவில் சபரிவாசன் தீர்த்த யாத்திரைக் குழுவின் மண்டல பூஜை வவுனியா உக்குளாங்குளம் ரகுபாக்கத்தில் நேற்று இரவு சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து இடம்பெற்றது.

இந்தப் பூஜையில் ஐயப்பனுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும், தீபாராதனைகளும் இடம்பெற்றமையுடன் ஆனந்தமிகு ஐயப்ப பஜனையும் இடம்பெற்றிருந்தது. இதில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த குருசாமிகள், ஐயப்ப சாமிகள், அடியார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சபரிவாசன் தீர்த்த யாத்திரைக் குழுவால் உபயகாரர்கள் மற்றும் யாத்திரைக்குழுவின் வளர்ச்சிக்குப் பங்காற்றியவர்களை கௌரவிக்கும் முகமாக நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-110)










மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த ஐம்பது மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகள் செரண்டிப் சிறுவர் இல்லத்தினால் கடந்த வியாழக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (ரி5-159)

# ஆசிரிய ஆட்சேர்ப்புக்கான வர்த்தமானி வெளியிடப்படும்

## மேல் மாகாண ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.27

மேல் மாகாணத்தில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்புக்கான நடைமுறை தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படும் என்று மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலக இன்று தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆட்சேர்ப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை தொடர்ந்து புதிய நியமனங்கள் வழங்கப்படும். அந்தவகையில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான வர்த்தமானி அறிவிப்பு விரைவில் வெளியாகும். மேல் மாகாணத்தில் அனைத்துப் பாடங்களிலும் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் அதிகம் உள்ளன எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)



# படைப்புழுப் பாதிப்பை ஆராய ஜனாதிபதி நேற்று கள விஜயம்

கொழும்பு, டிசெ.27

படைப் புழுவால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கள விஜயமொன்றை அனுராதபுரம், எலபத்துவ மற்றும் பஹலகம ஆகிய பகுதிகளுக்கு நேற்று மேற்கொண்டார்.

படைப்புழுவின் தாக்கத்தின் ஊடாக, பெரும்பாலான சோளப் பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயிகள் கடந்த இரண்டு வருடங்களாக பல்வேறு இன்னல்களை சந்தித்துள்ளனர்.

இதற்கமைய, படைப்புழுவின் தாக்கம் இந்த வருடமும் பல்வேறு மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள நிலையில் எதிர்பார்க்கப்பட்ட அறுவடை அதிக சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளமையை விவசாயிகள் இதன்போது ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்தனர். மேலும் பயிர்ச்செய்கைகளுக்கு காட்டு யானைகளால் ஏற்படும் அச்சுறுத்தல் தொடர்பிலும் எடுத்துக் கூறியுள்ளனர். (வ-இ)

# திருகோணமலையில் 120 தொற்றாளர்கள்

திருகோணமலை, டிசெ, 27

திருகோணமலை மாவட்டத்தில் மேலும் ஏழு பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் ஐவர் மூதூர் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும், ஏனைய இருவரும் திருகோணமலை நகரைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து திருகோணமலையில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 120ஆக அதிகரித்துள்ளது.


இதன்படி, திருகோணமலை நகரில் 66 பேரும், மூதூரில் 32 பேரும், கிண்ணியாவில் எட்டுப் பேரும் தம்பலகாமம் பகுதியில் ஆறு பேரும், சேருவில பகுதியில் 3பேரும், கோமரங்கடவல மற்றும் குச்சவெளி பகுதிகளில் தலா ஒவ்வொருவரும் தொற்றாளர்களாக அடையாளங்காணப்பட்டுள்ளனர். (வ-இ)



# நத்தாரை முன்னிட்டு அன்பளிப்பு

வவுனியா,டிசெ.27

நத்தார் பண்டிகையை முன்னிட்டு வசந்தபுரம் மீள் குடியேற்றக் கிராமத்திலுள்ள புனித யாகப்பர் தேவாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் தாய்மாருக்கு ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளால் அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்பட்டன. அங்கு வசிக்கும் வயதில் கூடிய 98 வயதான மூதாட்டி ஒருவர் இந்த அன்பளிப்புகளை வழங்கியிருந்தார். (ச)




## தென்மராட்சி கள் ஆஸிக்கு ஏற்றுமதி

சாவகச்சேரி,டிசெ.27

தென்மராட்சி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்க ளின் கொத்தணியினரால் உற்பத்தி செய்யப்பட்ட போத்தலில் அடைக் கப்பட்ட கள் ஆஸ்திரேலியா நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட வுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு கொத்தணித் தலைவர் க. துரைசிங்கம் தலைமை யில் வடிசாலையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிஷாந்த பத்திராஜ் மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்க ஜன் ராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-9)



## மழைக்கு சாத்தியம்

கொழும்பு, டிசெ.27

நாட்டின் பல இடங்களில் பிற் பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களிலும் கரையோரப் பிரதே சங்களில் பல இடங்களிலும் காலை வேளையில் மழை பெய் யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்க ளால் ஏற்படக்கூடிய பாதிப்புக ளைக் குறைத்துக்கொள்ள தேவை யான முன்னெச்சரிக்கை நடவடிக் கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படு கின்றனர் என்று வளிமண்டலவி யல் திணைக்களம் மேலும் தெரி வித்துள்ளது. (ற-இ)



# தடுப்பூசியை எடுத்துவரும் நடவடிக்கை

### ஜனாதிபதி ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.27

கொரோனாத் தடுப்பூசியை நாட்டுக்கு எடுத்து வருவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

கொரோனா தடுப்பூசியை நாட்டுக்கு கொண்டு வருவது தொடர்பான நடவடிக்கை களை ஒருங்கிணைப்பதற் கான பொறுப்பு அவரிடம் அண்மையில் வழங்கப்பட் டது. குறிப்பாக முழுமையான ஆய்வுக்குப் பின்னர் தடுப்பூசி களைக் கொண்டுவர உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுகா தார அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துமாறும் அவருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

இந்நிலையில் நாளை டிசெம்பர் 28 ஆம் திகதி திங்கட்கிழமை அடுத்தகட்ட விவாதங்கள் நடைபெறவுள் ளன எனவும் எதிர்வரும் இரண்டு வாரங்களில் இது தொடர்பில் பதிலை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

## தூர இடங்களுக்கான பஸ்சேவை ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 27

கொரோனா காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த தூர இடங்களுக்கான பஸ் சேவை எதிர்வரும் ஜனவரி மாதத்தி லிருந்து சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது எனபோக்குவரத்து இரா ஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். (ஒ-இ)



700 மாணவர்களுக்கு

## கற்றல் உபகரணங்கள் வழங்கும் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.27

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் 'உயர்த்தும் கரங்கள்' செயற் றிட்டத்தின்கீழ் வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த புதிய கல்வியாண்டுக்கு செல்லும் 700 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங் கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மாவிட்டபுரம், பருத்தித் துறை, சகாயபுரம், அரியாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 130 மாணவர்க ளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப் பட்ட நிலையில் புதிய கல்வியாண்டுக் காக பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏனைய மாவட்ட மாணவர்க ளுக்கும் கற்றல் உபகரணங்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கலகெதர கிராமத்துக்கு தற்காலிக பயணத் தடை

கொழும்பு, டிசெ.27

பாதுக்க, கலகெதர கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு பயணத் தடை விதிக்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது என்று பாதுக்க சுகாதார மருத்துவ அதிகாரி சுமித்ர கஹங்கம தெரிவித்தார்.

பாதுக்க, அருக்வத்தை பிரதே சத்தில் கொவிட்19 தொற்றாளர் ஒருவர் உயிரிழந்ததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இந்தப் பிரதே சத்தில் சுமார் 40 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இந்த பரிசோதனை முடிவுகள் நாளை கிடைக்கப்பெறவுள்ளன என்று மருத்துவர் மேலும் தெரிவித் தார். (ற-இ)

## தனிமைப்படுத்தலில் மேலும் ஒரு பிரதேசம்

கொழும்பு, டிசெ.27

கொழும்பு 09 வேலுவனா ராம வீதி பகுதி, நேற்று நள்ளிரவு தொடக்கம் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப் பட்டுள்ளது என இராணு வத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இப்பிரதேசத்தில் கொரோ னாத் தொற்றுக்குள்ளான பலர் அடையாளம் காணப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. (வ-இ)

# வெளிநாடுகளில் இலங்கையர் பாதுகாப்பு உறுதிசெய்யப்படும்!

### அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.27

சுமார் 40 நாடுகளில் தங்கியிருக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப் படும் என்று வெளிநாட்டு அமைச் சர் தினேஷ் குணவர்தன தெரிவித் துள்ளார். இலங்கை திரும்புவதற்கு எதிர்பார்த்துள்ளவர்களை அழைத்து வரும் நோக்கத்துடன், சம்பந்தப் பட்ட நாடுகளுடன் இராஜதந்திர பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன எனவும் வெளிநாடு சென்ற இலங்கையர்களில் 52 ஆயிரம் பேர் திருப்பி அழைத்து வரப்பட்டுள்ள னர் எனவும் அவர் கூறினார். மத்திய



கிழக்கு, தென் ஐரோப்பிய நாடுகளி லும், ஜப்பான், கொரியா, மலே சியா, சிங்கப்பூர் முதலான நாடுகளி லும் பத்து இலட்சத்துக்கு மேற் பட்ட இலங்கையர்கள் வேலை செய்கிறார்கள்.

முறையாகப் பதிவு செய்யாத ஐந்து இலட்சம் பேர் வரை வெளிநாடுக ளில் வேலை செய்து வருகின்றனர் என அமைச்சர் மேலும் கூறி னார். (ற-இ)

## யானைப் பாதுகாப்புக்கு தேசிய தொடர்பாடல் குழு!

கொழும்பு, டிசெ.27

காட்டு யானைகளால் பொதுமக்க ளுக்கு ஏற்படும் பாதிப்புக்களை தவிர்ப்பதற்கு தேசிய தொடர்பாடல் குழுவொன்றை அமைப்பதற்கு தீர்மா னிக்கப்பட்டுள்ளது என்று நாடாளு மன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 211 கிலோ மீற்றர் நீளமுடைய யானை வேலி அமைக்கப்பட்டது.அவை உரிய முறையில் பராமரிக்கப்படவில்லை. யானை வேலிகளை பராமரிப்பதற் காக வருடம் ஒன்றுக்கு 86 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-இ)

# 2021 இல் கொரோனா தொற்றை ஒழிப்போம்!

## அரசு அறிவிப்பு

கொழும்பு, டிசெ.27

எதிர்வரும் ஆண்டில் கொரோனாத் தொற்றை முற்றாக ஒழிப்போம் என்று பிற உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

பாணந்துறை பிரதேசத்தில் நேற்று நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முழு நாட்டையும் முடக்காமல் பொருளாதார மேம்பாட்டுக்கு மக்களுக்கு இடமளிப்போம் என்றும் எதிர்வரும் ஜனவரி 17 ஆம் திகதிக்கு பின்னர் விமான நிலையத்தை வழமைக்கு கொண்டுவர முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ற-இ)

## கொரோனா சிகிச்சை நிலையத்தில் மருத்துவர்கள் இருவருக்கு தொற்று

பொலநறுவை, டிசெ.27

பொலநறுவை வெலிகந்த கொரோனா விசேட சிகிச்சை மத்திய நிலையத்தின் மருத்துவர்கள் இருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலையில் பணிபுரிந்த இருவரும், கொரோனா விசேட சிகிச்சை மத்திய நிலையத்தில் பணியாற்றுவதற்காக வெலிகந்தவுக்கு வந்திருந்த நிலையில் அவர்களுக்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பரிசோதனை முடிவுகள் இன்று வெளியிடப்பட்ட நிலையில் அவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அவர்களுடன் தொடர்பிலிருந்த 10 பேர் பொலநறுவையில் உள்ள தனிமைப்படுத்தும் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (வ-இ)

## அண்டிஜென் சோதனையில் ஒருவருக்கு தொற்று உறுதி

கொழும்பு, டிசெ.27

கட்டுநாயக்க கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையில் வெளியேறும் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட ரெபிட் அண்டிஜன் பரிசோதனையில் புத்தளம் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2மணி தொடக்கம் 3 மணிவரையில் 50 ரெபிட் அண்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் போதே ஒருவருக்கு தொற்று உறுதியாகி யுள்ளது. இதேவேளை கம்பஹா மாவட்டத்தில் நேற்று மாலை 4 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் புதிதாக 105 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். இதையடுத்து அங்கு தொற்றுக்குள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 7,267 ஆக அதிகரித்துள்ளது. (வ-இ)



## இரு தலைகளுடன் அதிசய கடலாமை

கொழும்பு,டிசெ.28

ஹிக்கடுவை திராணகமக் கடற்கரையில் இரண்டு தலைகளைக் கொண்ட கடல் ஆமையொன்று பிரதேச மக்களால் அடையாளம் காணப்பட்டது.

கடல் ஆமை முட்டை பொரித்து குஞ்சுகள் வெளியாகிக் கொண்டிருந்தபோது, குஞ்சுகள் இடையில் இந்த இரட்டைத் தலை ஆமைக் குஞ்சு இருந்துள்ளது.

அதற்கு ஆறு கால்கள் மற்றும் இரண்டு தலைகள் காணப்படுகின்றன. அரிய வகையான இரட்டைத் தலை ஆமைக் குஞ்சு பிரதேச மக்களால் ஹிக்கடுவை வனஜீவராசிகள் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. (சு-இ)

## புதினம் தெரியுமோ?

**இப்போது அவரிடம், உடல் தகுதியுடன்தான் உள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்தும் மருத்துவச் சான்றிதழை பெற்றுத் தருமாறு கோரியுள்ளனர். அதுவும், அவர்களால் பெயர் குறிப்பிடப்படும் ஒரு மருத்துவமனையின் பணிப்பாளரிடம்தான் அதனைப் பெறவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளனர். அவ்வாறு பெயர் குறிப்பிடப்படும் மருத்துவமனைப் பணிப்பாளர் கடந்த தேர்தலின்போது ஓர் அரசியல் கட்சிக்கு சார்பாகச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்.**

**10 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற விபத்துக்கு, இப்போது உடற்தகுதி சான்றிதழ் கோரப்பட்டமையின் பின்னால் அரசியல் அழுத்தங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது.**

**தமக்கு வேண்டப்பட்டவர்களை வேண்டிய இடங்களில் நியமிப்பதற்கு, அந்த இடங்களுக்கு தகுதியானவர்கள் வந்து விடக் கூடாது என்பதற்காக இவ்வாறான 'தில்லாலங்கடி' வேலைகளைச் செய்வதாக கல்விப் புலத்தில் உள்ளவர்களே கவலையுடன் கூறுகின்றனர்.**

**– பட்சி**



4ஆம் கட்டமாக

## ‘கிளி ரெக்’ அமைப்பால் மரநடுகை செயற்றிட்டம்

கொடிகாமம் டிச 27

'கிளிரெக்' அமைப்பின் 'பயன் தரும் மரங்கள் நடுவோம். வளம் பல பெறுவோம்' எனும் மரநடுகை செயற்றிட்டத்தின் நான்காம் கட்டம் கோரக்கன்கட்டு, ஒதிய நகர் கிராமத்தில் நேற்று 26ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தலைவர் தி.பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது.

இத்திட்டத்தில் 25 குடும்பங்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் வழங்கி நடுகை செய்யப்பட்டன.

ஐக்கிய அமெரிக்காவில் புலம் பெயர்ந்து வசிக்கும் சிறீ என்பவரின் நிதி பங்களிப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருலிங்கநாதன், கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன், கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சிறீபாஸ்கரன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளரும் 'கிளிரெக்' அமைப்பின் நிர்வாக சபை உறுப்பினருமான ச.மேகனபவன், கிளிநொச்சி மாவட்ட செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளரும் கிளிரெக்கின் உபதலைவருமான அ.கேதீஸ்வரன் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-159)



## இறையாண்மையை இழக்கத் தயாரில்லை

### சரத் வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 27

இலங்கையின் இறையாண்மையை பாதிக்கும் வகையில் சர்வதேச அமைப்புக்கள் எவற்றினாலும் முன்வைக்கப்படும் பிரேரணைகளை இலங்கை ஒருபோதும் ஏற்காது. இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் புதிய தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய பிரேரணை தொடர்பில் கவனம் செலுத்துவோம். இறையாண்மையை பாதிக்கும் பிரேரணைகளை ஆதரிக்கமாட்டோம். இலங்கை தொடர்பில் கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் நாட்டின் இறையாண்மையை பாதிக்கும் வகையில் அமைந்திருந்தன.

இதிலிருந்து வெளியேறுவோம் என்ற வாக்குறுதியை மக்களுக்கு வழங்கினோம். அதனை நிறைவேற்றினோம். கோத்தாபய ஆட்சிக்கு வந்த பின்னர் வெளிவிவகாரக் கொள்கை திருத்தப்பட்டது. நாட்டுக்கு எதிராக செயற்படும் சர்வதேச அமைப்புக்களுடனான தொடர்பிலிருந்து விலகவும் தயார் என்று ஜனாதிபதி கோத்தாபய தெளிவாக குறிப்பிட்டுள்ளார். இதுவே அரசின் கொள்கையாகும், என்றார். (ஓ.இ)

# புதுக்குடியிருப்பில் மறுஅறிவித்தல் வரை சந்தை வியாபாரம் நிறுத்தம்





முல்லைத்தீவு, டிசெ.27

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் எழுமாற்றாக செய்யப்பட்ட பி.சி.ஆர் சோதனையில் கொரோனாத் தொற்றுடன் ஒருவர் அடையாளம் காணப்பட்டதை யடுத்து புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள மரக்கறி, மீன் வியாபாரிகள் அனைவரும் மறு அறிவித்தல்வரை வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என சுகாதார பிரிவினர் அறிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளரால் வடக்கில் உள்ள சந்தைகள் அனைத்தையும் மூடு மாறு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து சந்தை வியாபாரிகள் நடமாடும் வியாபாரம் ஊடாக வீதிகளில் மீன், மரக்கறி கடைகளை அமைத்து வியாபாரம் செய்து வரும் நிலையில் நேற்று கொரோனாத் தொற்றுடன் இனம்காணப் பட்ட மரக்கறி இறக்குமதியாளர் ஒருவர் இனம்காணப்பட்டதன் காரணமாக அப்பகுதி மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

இந்த நிலையில் மறுஅறிவித்தல் வரை சந்தை மற்றும் வணிக வியாபார செயற்பாடுகள் எவற்றிலும் ஈடுபடவேண்டாம் என பிரதேச சபை மற்றும் பொலிஸார் அறிவிக்கப்பட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஏற்பாட்டில் படையினர்,பொலிஸார் மற்றும் சுகாதார பிரிவினர் இணைந்து சந்தை மற்றும் புதுக்குடியிருப்பு நகர்பகுதியையும் தொற்று நீக்கம் செய்து வருகின்றனர். (ச-19)

## கண்டி நிலநடுக்க அறிக்கை இம்மாத இறுதியில் சமர்ப்பிப்பு

கண்டி, டிசெ.27

கண்டி திகன பகுதியில் அண்மையில் ஏற்பட்ட நில அதிர்வு தொடர்பான நிபுணர் குழுவின் இடைக்கால அறிக்கை எதிர்வரும் 31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அறிக்கையை, சமர்ப்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல குறிப்பிட்டார்.

சுற்றாடல் அமைச்சின் செயலாளர் மற்றும் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்கவிடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கண்டியின் திகனவில் பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட நிலநடுக்கங்கள் தொடர்பில் ஆராய 11 பேர் கொண்ட சிறப்புக் குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## சபாநாயகர் தனிமைப்படுத்தலில்!

கொழும்பு, டிசெ.27

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் அவரது குடும்பத்திலுள்ள சிலரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இன்று பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

சபாநாயகரின் பாதுகாப்புப் படையில் உள்ள அதிகாரி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்தே இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதையடுத்து அவருடன் நெருங்கிப் பழகிய ஊழியர்கள் பலரும் தனிமைப்படுத்தப்பட்டனர் எனத் தெரியவருகிறது. (ற-இ)

## அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் விரைவில்!!

கொழும்பு, டிசெ.27

கடவத்தையில் இருந்து மீரிகம வரையான அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் துரிதகதியில் நிறைவு செய்யப்படும் என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இந்த நிர்மாணப் பணிகள் மந்தகதியில் இடம்பெற்றன எனவும் இதனால் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு பொருத்தமற்ற ஒப்பந்தக்காரர்களை நியமித்தமையே வேலைத்திட்டம் தாமதமடையக் காரணமாகும்.

இந்த ஒப்பந்தக்காரர்களை நீக்கிவிட்டு அதை முழு மைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் கூறினார். (ற-இ)

## 25 மில்லி. தடுப்பூசிக்கு ஆசிய வங்கி கடனுதவி!

கொழும்பு, டிசெ.27

கொரோனா வைரஸுக்கு 25 மில்லியன் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியால் இலங்கைக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

84 மில்லியன் அமெரிக்க டொலரைக் கொண்ட முதலாவது தவணைக் கடனை வழங்குவதற்கு, நிதி அமைச்சு மற்றும் அபிவிருத்தி வங்கிக்கு இடையில் ஆவணங்கள் பரிமாறப்பட்டுள்ளன என்று நிதி அமைச்சின் செயலாளர் உறுதிப்படுத்தினார்.

தேவைக்கேற்ற வகையில் இந்தத் தொகையை 200 மில்லியன் டொலர் வரை அதிகரிக்க முடியும் எனவும் அவர் கூறினார். (ற-இ)

## கொட்டகலையில் எழுவருக்கு தொற்று

கொழும்பு, டிசெ.27

கொட்டகலை பகுதியில் ஒன்றரை வயது குழந்தை உள்ளிட்ட ஏழு பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. கொட்டகலையில், 60 பேருக்கு கடந்த 23ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டப் பிசிஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று வெளியாகியதையடுத்து இந்த விடயம் தெரியவந்துள்ளது. தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## தப்பியோடிய தொற்றாளர் மடக்கிப் பிடித்த பொலிஸ்

கொழும்பு, டிசெ.27

சப்புகஸ்கந்த மாகொல வடக்கு, தேவாலய வீதியிலுள்ள வீடொன்றில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அங்கிருந்து தப்பியோடிய நிலையில் அந்தப் பிரதேசத்தில் வைத்தே பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். சிகிச்சைகளின் பின்னர் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிசிஆர் பரிசோதனையின் முடிவு கிடைக்கும் வரை வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த அவர், பரிசோதனை முடிவில் தொற்று உறுதியாகியுள்ளதை அறிந்தவுடன் தப்பிச்சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## கொரோனாவால் வயோதிபர் சாவு

கொழும்பு, டிசெ.27

நாட்டில் மேலும் கொரோனா உயிரிழப்பு நேற்று பதிவாகியுள்ளது. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் கொழும்பு மோதர பகுதியில் உள்ள வயோதிபர் இல்லத்தைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் ஹோமாகம ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கொரோனா நிமோனியாவால் நேற்று இரவு உயிரிழந்துள்ளார். இந்நிலையில், இலங்கையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 187ஆக அதிகரித்துள்ளது. (வ-இ)